இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 09-07-2025

# தமிழ்நாட்டைப் பாராட்டும் மராட்டியம்!

இருபது ஆண்டுகளாகப் பிரிந்து இருந்த தாக்கரே சகோதரர்களை ஒன்றாக்கி விட்டது பா.ஜ.க.வின் இந்தித் திணிப்பு!

**இருபது ஆண்டுகளுக்கு முன்பு பால்தாக்கரேவின் மகன் உத்தவ் தாக்கரேவும், அவரது சகோதரர் மகன் ராஜ் தாக்கரேவும் பிரிந்தார்கள். சிவசேனா கட்சியில் இருந்து கருத்து வேறுபாட்டால் 2005 ஆம் ஆண்டு பிரிந்து மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனை என்ற அமைப்பை நடத்தி வந்தார் ராஜ் தாக்கரே. இவர்கள் இருவரது தனித்தனிக் கட்சியானது பா.ஜ.க. என்ற கட்சியின் வளர்ச்சிக்கு எளிதானது. இப்போது உத்தவ் தாக்கரே கட்சியையும் இரண்டாகப் பிரித்தது பா.ஜ.க. ஏக்நாத் ஷிண்டே தலைமையில் ஒரு சிவசேனாவை உருவாக்கி வைத்துள்ளார்கள். இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சிதான் பா.ஜ.க.வின் பாணியாகும். சொந்த பலத்தில் இல்லாமல் அடுத்தவர் பலவீனத்தில் வாழ்வதுதான் பா.ஜ.க.வின் பழக்கம்.**

**இருபது ஆண்டுகளுக்கு முன் பிரிந்த சகோதரர்களை, பா.ஜ.க.வின் இந்தி மொழித் திணிப்பு ஏகாதிபத்தியம் ஒன்றிணைத்து விட்டது. தமிழ்நாட்டைப் போலவே இந்தித் திணிப்புக்கு எதிராக கடுமையாகப் போராடத் தொடங்கி விட்டது மராட்டியம்.**

இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, ராஜ் தாக்கரேவின் மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனை ஆகிய கட்சிகள் கடுமையாக இறங்கியது. காங்கிரஸ் கட்சியும், சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸும் இப்போராட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து பங்கெடுத்தது. மராட்டிய மாநிலத்தில் நான்கு பெரிய அரசியல் கட்சிகளும் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் இறங்கியதை ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு எதிர்பார்க்கவில்லை. எனவே இந்தியை பள்ளிக் கூடங்களில் கட்டாயம் ஆக்கும் இரண்டு அரசாணைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது பா.ஜ.க. அரசு.

இந்தித் திணிப்பை தமிழ்நாடு கடுமையாக எதிர்ப்பதற்கு அரசியல் உள்நோக்கம் கற்பித்து வருகிறார்கள் பா.ஜ.க. ஆதரவாளர்கள். ஆனால் மராட்டியத்தில் என்ன நடந்தது? பா.ஜ.க. ஆளும் கூட்டணி அரசே, இந்தித் திணிப்பு அரசாணைகளை திரும்பப் பெற்றுள்ளது. மும்மொழிக் கொள்கை அல்ல, இருமொழிக் கொள்கைதான் என்பதை மகாராஷ்டிரா மாநில அரசே ஏற்றுக் கொண்டு விட்டது.

இந்தித் திணிப்புக்கு எதிரான மாபெரும் பேரணியை கடந்த 5 ஆம் தேதியன்று மும்பையில் ஏற்பாடு செய்திருந்தார்கள் உத்தவ் தாக்கரேவும், ராஜ் தாக்கரேவும். இந்தித் திணிப்பு அரசாணைகளை பா.ஜ.க. அரசு திரும்பப் பெற்றதால் அக்கூட்டமானது வெற்றி விழாக் கூட்டமாக மாற்றப்பட்டது. இருபது ஆண்டுகள் கழித்து தாக்கரே சகோதரர்கள் இருவரும் ஒரே மேடையில் பங்கேற்று, ஒன்றாகக் காட்சி அளித்தது அம்மாநில மக்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்கி இருக்கிறது. அவர்களது தாய்மொழியான மராத்தி மொழியைக் காக்க இருவரும் ஒன்று சேர்ந்துள்ளார்கள் என்பது அரசியல் வரலாற்றில் முக்கியமானது ஆகும்.

மொழிக் காப்பு என்பது மிகமிக முக்கியம் என்பதை தமிழ்நாட்டின் வழியில் மராட்டியமும் வழிமொழிந்திருக்கிறது.

**“இந்தித் திணிப்பை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஒற்றுமையே நமது பலம். மராத்தியர்களைப் பிரிக்க பா.ஜ.க. நினைக்கிறது. மராத்தியர்களான நாம் நமக்குள் சண்டையிடத் தொடங்கியதும், டெல்லியின் அடிமைகள் நம்மை ஆளத் தொடங்கினார்கள்” என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே.**

**“எங்கள் இருவரையும் ஒன்றிணைத்ததன் மூலமாக பால் தாக்கரேவால் செய்ய முடியாததை இன்றைய பா.ஜ.க. முதலமைச்சர் செய்து காட்டிவிட்டார். இங்கு மும்மொழியைத் திணிக்கிறார்கள். ஆனால் உத்தரப்பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாவது மொழி என்ன என்று கேட்டால் அவர்களிடம் பதில் இல்லை. மூன்றாவது மொழிக்கான தேவை இந்தியாவில் என்ன இருக்கிறது? வெறும் 200 ஆண்டு கால வரலாறு கொண்டதுதான் இந்தி. மற்றபகுதிகளையும் சேர்த்து மராட்டிய மன்னர்கள் ஆண்ட போதும் மராத்தியை மராட்டிய மன்னர்கள் திணிக்கவில்லை. இன்று பிரித்தாளும் சூழ்ச்சியாக இந்தியை பா.ஜ.க.வினர் திணிக்கிறார்கள். மகாராஷ்டிராவில் இருந்து மும்பையைப் பிரிப்பதற்காகத்தான் மும்மொழிக் கொள்கையை திணிக்கிறார்கள். மொழிப்பிரச்சினைக்கு பிறகு ஜாதிப் பிரச்சினையை வைத்து மக்களைப் பிரிப்பார்கள்”** என்று சொல்லி இருக்கிறார் ராஜ் தாக்கரே.

தமிழ்நாட்டின் மொழிப்பற்றையும், போராட்டத்தையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் பாராட்டி இருக்கிறார் ராஜ் தாக்கரே. ‘இந்தி பேசும் மாநிலங்கள் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளன. ஆனால் இந்தி பேசாத மாநிலங்கள் முன்னோக்கிச் செல்கின்றன. இருந்த போதிலும் எங்கள் மீது இந்தியை ஏன் திணிக்கிறீர்கள்’ என்று கேட்டு இருக்கிறார் ராஜ் தாக்கரே. **‘எந்தக் காலத்திலும் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை விட்டுத் தர மாட்டார்கள். தென்னிந்திய பிரபலங்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கில வழியில் படிக்க வைத்தாலும் தமிழை எந்தச் சூழலிலும் விட்டுத் தர மாட்டார்கள்’** என்பதையும் ராஜ்தாக்கரே சொல்லி இருக்கிறார்.

**மொழி என்பது அரசியல் முழக்கமல்ல. அது ஒரு பண்பாட்டின் அடையாளம். ‘இந்தி எதிர்ப்பு போராட்டம் என்பது அரசியல் போராட்டமல்ல, பண்பாட்டுப் போராட்டம்’ என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். இந்தியால் மட்டுமல்ல; எந்த மொழியாலும் தமிழை அழிக்க முடியாது. ஆனால் தமிழர் பண்பாடு சிதைக்கப்படும்’ என்று அவர் சொன்னார். அதனால் தான், ‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்ற அடிப்படையில் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் போராடினார்கள். அதே போராட்டத்தீயை இன்று வரை அணையாமல் காத்து வருகிறார் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இப்போராட்டங்களுக்கு இதுவரை அரசியல் உள்நோக்கம் கற்பிக்கப்பட்டது. இன்று மொழிப் போராட்டத்தின் உண்மையான நோக்கத்தை மராட்டியம், கர்நாடகம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் உணர்ந்து வருகின்றன.**

மொழி எதேச்சதிகாரத்துக்கு எதிரான தேசிய இனங்களின் போராட்டமானது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தீவிரமாகி வருகிறது என்பதும், அதனை இந்தித் திணிப்பு வாதிகளால் தடுக்க முடியாது என்பதும், இப்போராட்டமானது மாநில எல்லைகளைத் தாண்டி இந்தியா முழுமைக்குமான போராட்டமாக வடிவெடுக்கும் என்பதையும்தான் மராட்டிய நிகழ்வுகள் காட்டுகின்றன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 36 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம், 17 கோடியே 52 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 65 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள், என மொத்தம் 54 கோடியே 80 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மு.சாய் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வருவாய்த்துறை சார்பில்

# தருமபுரி மாவட்டத்தில் ரூ.54.80 கோடியில் அரசு கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 9 -

வருவாய்த் துறை சார்பில் தருமபுரி மாவட்டத்தில் ரூ.36.62 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம் மற்றும் ரூ.18.18 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 36 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம், 17 கோடியே 52 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 65 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள், என மொத்தம் 54 கோடியே 80 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாதிச் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ், பட்டா வழங்குதல் போன்ற சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இணையவழிச் சேவைகளை வழங்குதல், அலுவலகப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் 111 வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு 262 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, தற்போது வரை 71 கட்டடங்கள் 180 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் இணையவழி மூலம் 1 கோடியே 22 இலட்சம் 66 ஆயிரத்து 975 பட்டா மாறுதல் ஆணைகள் மற்றும் 17 இலட்சத்து 54 ஆயிரத்து 340 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்**

**தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம்**

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய கூடுதல் அலுவலகக் கட்டடம் ஒன்று அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.1.2022 அன்று தருமபுரி மாவட்ட அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி, தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 4.25 ஏக்கர் நிலப்பரப்பில், 36 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய அலுவலகக் கட்டடத்தின் தரைத்தளத்தில் சிறப்பு துணை ஆட்சியர் அலுவலகம், கூட்டரங்கம், ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலகம், திட்ட அலுவலர் அலுவலகம், முக்கிய பிரமுகர்களுக்கான அறை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேர்தல் பிரிவு ஆகியவையும், முதல் தளத்தில் மாவட்ட ஆட்சியர் அறை, சிறு கூட்டரங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் அறை, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) அறை, தேசிய தகவலியல் மையம், அலுவலகப் பிரிவுகள் ஆகியவையும், இரண்டாம் தளத்தில் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அலுவலகம், நிலப் பிரிவு அலுவலகம், உதவி இயக்குநர்கள் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை பிரிவு அலுவலகம் ஆகியவையும் மூன்றாம் தளத்தில் ஊரக வளர்ச்சி முகமை அலுவலகங்கள், நான்காம் தளத்தில் மாவட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி அலுவலகம், மாவட்ட ஊராட்சி கூட்டரங்கம், மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் செயலாளர் அறைகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், உதவி ஆணையர் கலால் அலுவலகம் போன்ற அலுவலங்களும், ஐந்தாம் தளத்தில் உதவி இயக்குநர் நில அளவை அலுவலகம், சிப்காட்டிற்கான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், துணை இயக்குநர் (சுரங்கம்) அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் இயங்கும்.

**வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மதுரை மாவட்டம் மேலூர், தருமபுரி மாவட்டம் பென்னாகரம், தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் (மேற்கு) ஆகிய இடங்களில் 17 கோடியே 52 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்;

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை மற்றும் கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆகிய இடங்களில் 65 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்;

என மொத்தம் 54 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மு.சாய் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக தருமபுரி மாவட்டத்திலிருந்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் அ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன்

# எம்.எஸ்.தோனி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 9 -

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ். தோனி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**அழுத்தமான சூழ்நிலையையும் தனது ஒவ்வொரு நகர்வின் மூலம் கவிதையாய் மாற்றிய கிரிக்கெட்டின் தனித்துவமிக்க அரிய வீரர் மகேந்திர சிங் தோனி அவர்களுக்குப் பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!**

**பெருமை பிறப்பிலேயே வருவதல்ல, எடுக்கும் ஒவ்வொரு முடிவினாலும், ஒவ்வொரு ஓட்டத்தினாலும், அமைதியாக ஈட்டுகின்ற ஒவ்வொரு வெற்றியாலும் கட்டமைக்கப்படுவது அது என நீங்கள் காட்டியிருக்கிறீர்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.